GNANA BHAKTAMITRAN
Pastor and Evangelist
Evangelical Bible Assembly
Madurai, India



ஆவிக்குரிய பெலனடைதல்

*Spiritual Reinforcement*
for EBA Members



# புதிய வெளியீடு-அறிவிப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பான அங்கத்தினர்களுக்கு,

***சூழ்நிலைகளை வளை***

நாங்கள் இப்போது, "ஆவிக்குரிய பெலனடைதல்" என்கிற ஒரு புதிய வெளியீட்டை ஆரம்பிக்கப் போகிறோம். இது உங்களுக்கு சந்தோஷத்தை அளிக்கிறதா அல்லது வருத்தத்தை அளிக்கிறதா? நாம் ஒவ்வொருநாளும், செய்துமுடிக்க வேண்டிய அலுவல்களை செய்துமுடிக்கக் கூடாமல், அடுத்த நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவைக்கிறோம். அப்படியிருக்க, இதைப் படித்து முடிக்க நமக்கு நேரம் இருக்குமா? ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தடையாக இருக்கக் கூடிய சந்தர்ப்பசூழ்நிலைகளையே நாம் வளைத்து மாற்ற வேண்டியதாயிருக்க, கடவுள் அனுதினமும் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்குக் கற்றுத் தருகிற பாடங்களை படிக்காமல் தவிர்க்க முடியாது.

இந்த வெளியீட்டின் மூலமாக கடவுளின் செய்தி ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினருக்கும் கிடைக்கிறது. நான் கடவுளால் தொடர்ந்து வழிநடத்தப்பட்டுக் கொண்டுவருகிறேன். அவர் மூலமாக எனக்குக் கிடைக்கும் கருத்துக்களை உங்களோடும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு இருக்கும் கஷ்டமான சூழ்நிலைகளையும் நான் உணர்ந்திருக்கிறேன். அதுமாத்திரமல்ல, நாம் கடைசிகாலத்தை நோக்கிப் போய்க் கொண்டேயிருக்கிறோம் என்பதையும் உணர்ந்திருக்கிறேன். அதாவது, இன்னும் காலம் செல்லச்செல்ல நாட்கள் மேலும் கடினமானதாகத்தான் ஆகும் என்பதையும் உணர்ந்திருக்கிறேன். ஆகவே எவ்வளவு கஷ்டமான சூழ்நிலைகளாக இருந்தாலும், கடவுளின் வசனத்திற்கு ஏற்ப நம்மை வளைத்துக் கொள்ளத்தான் வேண்டும். இந்த காலத்தையே நாம் கஷ்டமான காலம் என்று சொல்வோமானால், வேதாகமம் குறிப்பிடும் உபத்திரவகாலங்களை நாம் எப்படி சந்திக்கப் போகிறோம்? அந்த உபத்திரவ நாட்களுக்கு முன்னதாக நாம் இவ்வுலகத்தைவிட்டுப் போய்விட வேண்டும் என்பது, சபையின் இடைவிடாத ஜெபமாக இருக்க வேண்டும்.

***சத்தியத்தை பகிர்ந்து கொள்ளுதல்***

**. . . ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்தில் இருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்** (யோவா 7:38,39) என்று இயேசு கூறினார். இந்த மாதிரியான ஜீவதண்ணீரை, சக அங்கத்தினர்களோடு நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். நமது

சபைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் புத்திமதிகளில் முக்கியமானது, இப்படியாகக் கிடைக்கும் ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கிக் கொண்டவர்கள் அதை தன்மட்டில் சுயநலமாக வைத்துக் கொள்ளாமல், விளங்காதவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். சபையின் போதகர் ஒரு செய்தியை பிரசங்கித்தாரென்றால், அது அந்த சபையின் அங்கத்தினர் அனைவருக்கும் விளங்கச் செய்வது சபையின் கடமையாகும். அந்த அக்கறை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். அப்போதுதான் சபையில் ஒருமனதான வளர்ச்சி ஏற்படும். சபைக்கு சொல்லப்படும் சத்தியங்கள் சேர்த்து வைப்பதற்காக அல்ல; சபையாரின் உபயோகத்திற்கென்று செலவிடப்பட வேண்டும். பசியுள்ள குழந்தை நல்ல ஆகாரத்திற்காக ஏங்கித் தவிப்பது போல, ஒரு மெய்யான சபையும் சத்தியத்திற்காக பசியாயிருக்கும்.

***முன்னேறு அல்லது சீரழிந்து போ***

நாம் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறாவிட்டால், சீரழிந்துதான் போவோம். ஏனென்றால் ஆவிக்குரிய வாழ்க்கை என்பது மலைமீது ஏறுவது போன்றது. அதற்கு இடைவிடாத முயற்சி தேவை. அந்த முயற்சியை கைவிட்டோமானால், சறுக்கிக் கொண்டு கீழேதான் வருவோம். அஜாக்கிரதையான விசுவாசிகள், தங்கள் ஆவிக்குரிய முன்னேற்றத்தில் தொடர்ந்து நிலைநிற்பதில்லை. அது அவர்களுக்கு ஆபத்தை வருவிக்கும். அவர்களில் சிலர் ஒழுங்கீனமாக இருப்பதில் மிகவும் ஒழுங்காக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் இலக்கை அடையாமற்போகும் ஆபத்தை அடைவார்கள்.

***விடாமுயற்சி***

சிறு துளி பெருவெள்ளமாகும். அதேமாதிரிதான், ஒருவன் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றம் அடைவதும். அனுதினமும் அவன், கர்த்தருடைய வசனத்தின் மூலமாக பெற்றுக் கொள்ளும் ஆகாரத்தைப் பெறுத்து அவனது ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்படும். மதுரை சபையில், சில அங்கத்தினர்கள், அதிகமாக வசனங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதை பார்த்திருக்கிறீர்கள். அதற்குக் காரணம், நான் மேற்கூறிய காரியம்தான். நாம் இந்த புதிய வெளியீட்டை துவங்கியதற்குக் காரணம், உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஆரோக்கியமாக்கவும், அதிகப்படுத்தவும்தான். யாருமே தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை, சாதாரணமாக இருந்தால் போதும் என நினைத்துவிடக் கூடாது. நாம் அழைக்கப்பட்ட அழைப்பு எவ்வளவு மகத்துவமானது என்பதை நினைத்துப் பார்த்து உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். சாத்தானின் கண்ணிகளுக்கும், வஞ்சனைகளுக்கும் இடம் கொடுத்து, முயற்சியைக் கைவிட்டுவிடக் கூடாது. ஒவ்வொருவரும் இந்த புதிய வெளியீட்டை நன்றாகப் படித்து பிரயோனப்படுத்திக் கொள்ள வேண்டுமென உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இதை எங்கேயாவது மூலையில் போட்டுவிடக் கூடாது.

ஒவ்வொரு வெளியீட்டிற்குப் பிறகும் நான் உங்களுக்கு அது சம்பந்தமான கேள்விகளை அனுப்பப் போகிறோன். நீங்கள் எந்த அளவிற்கு இவைகளைப் படித்து பிரயோஜனப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிய அது உதவும்.

# கேள்விகள்

1. இந்த தியானத்தின் மத்திப கருத்து என்ன?

2. நாம் நமது தினசரி வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகள் யாவை?

3. அத்தோடு நான் புதிதாக சேர்க்கும் பிரச்சனை என்ன?

4. சூழ்நிலைகளை வளைத்தல் என்றால் என்ன?

5. புதிதாக நான் கூறும் பிரச்சனையை நமது தினசரி வாழ்வில் எவ்வாறு கையாளப் போகிறோம்?

6. நாம் தினந்தோறும் சந்திக்கும் பிரச்சனைகளுக்கும், புதிய வெளியீட்டை பயன்படுத்துவது போன்ற பிரச்சனைக்கும் என்ன வித்தியாசம்?

7. இந்த புதிய வெளியீட்டை பயன்படுத்த வேண்டுமென நான் உங்களை உற்சாகப்படுத்துவதற்குக் காரணங்கள் என்ன?